2018 ஜூன் 14]

பிற்பகல் 12–10

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நான் சொல்வதைக் கேளுங்கள். காங்கிரஸ் கட்சி சார்பில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இரண்டு நீதிபதிகள் வழிமுறையைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இல்லை.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நான் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நான் ஒன்றும் தவறாகப் பேசவில்லை. நீங்கள் கேளுங்கள். இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த ஆணை ** என்று நீதிமன்றம் சொல்கிறது. இந்த அரசு ** என்று சொல்கிறார்கள். இதை நீங்கள் ஏன் செய்யக் கூடாது என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்துகிறேன். நான் காங்கிரஸ் சட்சியின் சார்பில் பேசுவது என்னவென்றால், இது மக்களுடைய பிரச்சினை. Ruling party ஆக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், மக்களுடைய பிரச்சினையை ஆலோசிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களுடைய இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. Discuss பண்ணியிருக்கிறார்கள். இதற்குத் தீர்வு காண்பது நல்லது என்பதற்காகத்தான் நான் வலியுறுத்துகிறேன்.

6. கவன ஈர்ப்பு

திருத்தணி நகராட்சி, குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்) பதில் கேட்டிருக்கிறேன். எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள முடியாது. அவசர முக்கியத்துவம் கருதி, சில விஷயங்களை எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) அரசின் பதிலுக்காக அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லாவற்றையும் இன்றைக்கே எடுத்துக்கொள்ள முடியுமா? உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகராட்சியில் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புக்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை

திருத்தணி நகராட்சி, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி சென்னையிலிருந்து 84 கி.மீ. தொலைவில் சென்னை—திருப்பதி சாலையில் அமைந்துள்ளது.

தற்போது இந்நகராட்சிக்கு கீழ்க்காணும் திட்டங்கள்மூலம் நாளொன்றுக்கு 3.13 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது:

1. நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் அருங்குளம் குடிநீர்த் திட்டம்மூலம் 1.05 எம்.எல்.டி.

2. குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அரக்கோணம்—திருத்தணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் 1.00 எம்.எல்.டி.

3. உள்ளூர் நீராதாரங்கள்மூலம் 1.08 எம்.எல்.டி. (உள்ளூர் நீராதாரங்கள் நிலைத் தன்மை அற்றவையாகும்.)

மக்கட்தொகை மற்றும் குடிநீர்த்தேவை:

2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியின் மக்கட்தொகை 44,781 ஆகும். இந்நகராட்சியில் தற்போதைய மக்கட்தொகை 51,900 (2020 ஆம் ஆண்டு, இடைக்காலம் (2035—ன்படி) 66,200, உச்சகாலம் (2050—ன்படி) 84,600 ஆகும்.

2018 ஜூன் 14] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இந்நகராட்சியின் இடைக்காலம் (2035) மற்றும் உச்சகாலம் (2050) தினசரி குடிநீர்த் தேவை நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் முறையே 5.13 மில்லியன் லிட்டர் மற்றும் 7.18 மில்லியன் லிட்டர் ஆகும்.

திட்ட விவரம்:

இத்திட்டத்தில் பாலாற்றில் அத்திப்பட்டு அருகில் 11 எண்ணம் நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு, 15.65 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய தரைமட்ட தொட்டியில் நீர் சேகரிக்கப்படுகிறது. பின் அங்கிருந்து 30.26 கிலோ மீட்டர் தூரத்தில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு உந்தப்படுகிறது. (Pumping main) பின் அங்கிருந்து 33.56 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சேகர்வர்மா நகரில் புதிய 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட தொட்டியில் இயல்பு புவியீர்ப்பு விசையின் (Gravity main) மூலம் குடிநீர் சேகரிக்கப்படுகிறது. பின் இங்கிருந்து ஏற்கெனவே பயனில் உள்ள 10.00 இலட்சம் கொள்ளளவுள்ள தரைமட்ட தொட்டி மற்றும் இந்திரா நகரில் புதிதாக கட்டப்படவுள்ள 10.40 இலட்சம் லிட்டர் மேல்நிலை தொட்டிகளுக்கு 5.18 கிலோ மீட்டர் நீளமுள்ள குழாய்கள்மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு, பின் 86 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய பகிர்மானக் குழாய்கள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரை 2–3–2018–ல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது, நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான தோராய திட்ட மதிப்பீடு ரூ.110.00 கோடி ஆகும்.

இத்திட்ட மதிப்பீடு அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, நிதியாதாரம் இறுதி செய்யப்பட்ட பின்னர், திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆளுகிறபோது

சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து சென்னை நகருக்குச் சிறப்பினைச் சேர்த்தார்கள். அதேபோன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகிறபோது புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டுவந்து சென்னை நகருக்குச் சிறப்பினைச் சேர்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்ற திட்டங்களைப் பின்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை ரூ.1,652 கோடி மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்ற ஒப்புதல் அளித்துள்ளார்கள். இது வரலாற்றுச் சாதனை ஆகும். அந்த வகையிலே, நான் சார்ந்திருக்கிற திருத்தணி நகராட்சியில் சுமார் 1 இலட்சம் பேர் வசிக்கின்றனர். 21 வார்டுகள் உள்ளன; வளர்ந்துவரும் நகரம் ஆகும்; கோயில் நகரம் ஆகும். கர்நாடக மாநிலத்திலிருந்தும், ஆந்திர மாநிலத்திலிருந்தும் மற்ற மாவட்டங்களிலிருந்தும் ஒரு நாளைக்கு சுமார் 10,000 பேர் வந்து செல்கின்றனர். நிரந்தரக் குடிநீர்த் திட்டம் எதுவும் இங்கு இல்லை. 7 MLD, அதாவது 70 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திருப்பாற்கடல் பகுதியிலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வர ரூ.110 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிருவாக ஆணையரகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. விவர அறிக்கையிலேயும் நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்ட பின்னர் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும் என்கின்ற நல்ல அறிவிப்பினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக திருத்தணி தொகுதி மக்கள் சார்பிலே நன்றி கலந்த வணக்கத்தையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதன் முக்கியத்துவத்தைக் கருதி மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டே நிதி ஒதுக்கீட்டினைச் செய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இந்தக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம்

2018 ஜூன் 14] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பராமரிக்கப்படும் அரக்கோணம்–திருத்தணி கூட்டுக் குடிநீர்த் திட்டம், நகராட்சியால் பராமரிக்கப்படும் அருங்குளம் குடிநீர்த் திட்டம் மற்றும் உள்ளூர் நீராதாரங்கள்மூலம் நாளொன்றுக்கு 3.13 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு, நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 69 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12–15

திருத்தணி நகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2016–2017 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் திருத்தணி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்த முதற்கட்ட ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, இத்திட்டத்தின் ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை 79 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் ஆணைப்படி, குடிநீர்த் திட்டத்துடன் வீட்டு இணைப்புப் பணியை ஒருங்கிணைத்து மேற்கொள்ள தொழில்நுட்பக் குழுவின் ஆலோசனையின்படி, திட்ட வடிவமைப்பில் சில மாற்றங்கள் செய்து, திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தோராய மதிப்பீடு 110 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தை இறுதி செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது முடிந்த பின்னர், திருத்தணி நகராட்சி மக்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின், இந்த ஆண்டே இப்பணியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் தொடர்ந்து இந்தப் பிரச்சினையை வலியுறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். கண்டிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கூடிய விரைவில் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன், சொல்லுங்கள். உரையை முடியுங்கள். நேரம் ஆகிறது.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்பிற்கு திருத்தணி தொகுதி மக்கள் சார்பில் மீண்டும் ஒரு முறை நன்றி கலந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *திருத்தணி தொகுதியில் திருத்தணி, பள்ளிப்பட்டு மற்றும் ஆர்.கே. பேட்டை ஆகிய 3 முழு ஒன்றியங்கள் இருக்கின்றன. தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 3 ஒன்றியங்களுக்கும் தனித் தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அம்மாவின் அரசு நிறைவேற்றி வைக்குமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ.110 கோடி நிதி இந்த ஆண்டே ஒதுக்கப்படுமா என்று கோரிக்கை வைத்தார்கள். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதேபோல், மற்ற ஒன்றியங்கள் குறித்து புதிதாக ஒரு கோரிக்கையை வைக்கிறார். அதற்கான நிதி ஆதார சூழ்நிலையைப் பொறுத்து, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதனை அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

7. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், அரசு தலைமைக் கொறடா மற்றும் மனுக்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*